# சார்பு நீதிமன்றம், அவிநாசி

## MCOP - 39/2020 C/w MCOP No.143/2023

**நாள் – 24.07.2025**

**PW – 1** தண்டபாணி

**த/பெ.** முத்துசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025)**

**குறுக்கு விசாரணை**

1. நான் MCOP 39/2020 என்ற வழக்கின் மனுதாரர் ஆவேன். விபத்து 08.08.2017–ம் தேதியில் சுமார் 8.30, 9.00 மணி வாக்கில் நடந்தது. என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் மோட்டார் வாகன சட்ட விதிமீறல் ஏற்பட்டுள்ள நிலையில் 3–ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயம் எனக்கு சுமார் 45 வயது இருந்திருக்கும். நான் கொத்தனார் வேலை செய்து வந்தேன். கொத்தனார் வேலை செய்ததன் மூலம் மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு தலையில் அடிப்பட்டு 2 காதுகளிலும் ரத்தம் வழிந்தது. இடது காலில் அடிபட்டு எலும்பு முறிவும் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து மனுவிலும், எனது சாட்சியத்திலும் முன்னுக்கு பின் முரணான வகையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆப்ரேஷன் எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் என்பதால் தான் ஆப்ரேஷன் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான் எனக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் எனது வருமானம் பற்றிய விபரங்களை முன்னுக்கு பின் முரணான வகையில் சொல்வதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. காப்பீட்டு விதிமீறல் இருப்பதால் 3–ம்எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது நல்ல நிலைமையில் தான் இருந்து வருகிறேன் என்றும், ஆனால், இந்த வழக்கிற்காக வேண்டி வலிப்பு வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் நான் இந்த மனுவில் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றும், வட்டி விகிதமும் அதிகம் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய ஆய்வறிக்கையில் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள நிலையில், இந்த விபத்தில் விதிமீறல் இருப்பதால் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.24 13:12:51 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**